OS.No. 111/2001 மற்றும் 48/2005

Dated : 21.08.2023

Time: 11.50 a.m to 12.05 p.m

P.W- 1 சாட்சி ரங்கநாதன் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 7 பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை:</u>

1) நான் இவ்வழக்கை வீடு மற்றும் கடைகளுக்காக தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு 111/2001 வழக்கு சொத்துக்களை உள்ளடக்கியே மற்ற வழக்கான 48/2005 நான் தாக்கல் செய்துள்ளேன். இரண்டிலும் அந்த சொத்துக்களுக்கு நிரந்திர தடை உத்தரவு கோரியுள்ளேன் என்றால் சரிதான். முதல் வழக்கு என்னுடைய உரிமை மூலத்தை விளம்பகம் கோரி தாக்கல் செய்தேன். நான் முன்நிறுத்தியுள்ள வீட்டு வரி மற்றும் மின் கட்டண ரசீதுகள் எனக்கு எழுதப்பட்ட தான பத்திரமான 30.06.1995 மற்றும் 03.07.1995 ஆவணங்களை முன்நிறுத்தி பெறப்பட்டவை என்றால் சரிதான்.

2) என்னுடைய பூர்வீக விவசாய சொத்துக்கள் தென்னங்குடிபாளையத்திலும், அப்பம்மசமுத்திரம் கிராமத்திலும் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன தான பத்திரங்களை என் தாயார் பின்னிட்டு ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். அதே தேதியில் அவர் அந்த சொத்தை 9ம் பிரதிவாதி சிவானந்தம் பெயருக்கு எழுதி கொடுத்துவிட்டார். பின்னிட்டு அந்த கிரய பத்திரத்தையும் என் தாயாரும் சிவானந்தம் இருவரும் சேர்ந்தே ரத்து செய்துவிட்டார்கள்.

3) மேற்படி மேற்சொன்ன கிராமத்தில் உள்ள பூர்வீக சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு தான் கிரயம் வாங்கப்பட்டவை என்றால் அவை என் தாயாருக்கு சொந்தமாக வந்த வருமானத்தை கொண்டு அவர் பெயரில் வாங்கப்பட்ட சொத்து ஆகும். மேற்படி என் தாயார் பெயரில் என் தந்தையால் சொத்து வாங்கப்பட்டது என்றால் என் தாயின் தாய் வழி சொத்தை கொண்டு வாங்கப்பட்டது. அவ்வாறு என் தாயின் தாய் வழி சொத்தை கொண்டு வாங்கப்பட்டதற்கு ஏதாவது ஆதாரம் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. மேற்படி எனது கூற்று பொய் என்பதால் தான் அதற்கான ஆதாரத்தை நான் முன்நிறுத்தவில்லை என்றால் சரியல்ல.

4) இந்த வழக்குகள் நிலுவையில் இருக்கும் போதே குற்றவியல் வழக்குகளும் ஏற்பட்டது என்றால் சரிதான். வீட்டை தவிற மற்ற நிலங்கள் குறித்து தான் வழக்கிற்கு முன்பு எங்களுக்குள் பேச்சு வார்த்தை நடந்தது. காட்டை பொறுத்து அணைவருக்கும் சமபாகம் என பேசினோம். மேற்படி ஏன் தான பத்திரத்தை ரத்து செய்தீர்கள் என தாயாரிடம் கேட்டீர்களா என்றால் அந்த தான பத்திரம் ரத்து செய்ததற்கு முன்பு தான் மேற்சொன்ன பேச்சு வார்த்தை நடந்தது. மேற்படி பேச்சுவார்த்தை குறித்து பஞ்சாயத்து ஆவணம் எழுதப்பட்டது. 18.05.1998 -ல் மேற்சொன்ன பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதப்பட்டது. அந்த ஆவணத்தை நான் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கில் ஒப்படைத்துள்ளேன்.

(பிரதிவாதி வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Subordinate Judge,**
**Attur.**